# அரசறிவியல்

## பாடத்திட்டம்

# தரம் 12 - 13

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவது)

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை

இணையத்தளம்: www.nie.lk மின்னஞ்சல் : info@nie.lk

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | iii - iv |
| முன்னுரை | v |
| தேசிய இலக்குகள் | vi |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | vii - viii |
| பாடக் குறிக்கோள்கள் | ix |
| தேசிய இலக்குகளும் பாடத் தேர்ச்சிகளும் | xi - xiv |
| தேர்ச்சி அடிப்படையில் உத்தேசத் திட்டம் | xv |
| அரசறிவியல் பாடத்திட்டம் | |
| தரம் - 12 | 01 - 10 |
| தரம் - 13 | 11 - 20 |
| பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | |
| கற்றல் கற்பித்தல் முறையியல் | 21 |
| கணிப்பீடும் மதிப்பீடும் | 22 |
| பாடத்திட்ட அபிவிருத்திக்குழு | 23 |

# அறிமுகம்

இற்றைப்படுத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரத்திற்கான அரசறிவியல் பாடத்திட்டமானது 2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. அரசறிவியலுக்கான இப்பாடத்திட்டமானது 15 பாடத்தலைப்புகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் இப் பாடத்திட்டம் அரசறிவியலைப் பயிலும் மாணவர்களுக்குப் பாடப்பரப்பைச் சிறந்த முறையில் கற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறும் ஆசிரியர்களுக்குப் புதிய விடயங்களைக் கற்பிப்பதற்கு இலகுவான முறையிலும் அமையும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தின் முதலாம் இரண்டாம் தலைப்புகள் அரசறிவியலை விளங்கிக் கொள்ளுதலை அரசியல் சமூக வாழ்க்கையின் கட்டாய அங்கமாகக் கருதுவதோடு அரசறிவியலில் உள்ளடங்கியுள்ள துறைகளினூடாக அரசியல் உலகம் பற்றிய விமர்சனத்தில் ஈடுபடுவதற்கு ஏற்ற வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டங்கள் அரசு மற்றும் அதன் வகிபாகத்தை அறிமுகம் செய்வதுடன் மனித சுதந்திரத்தை மேம்படுத்தும் பொருட்டு அரசுக்கு மிகவும் அவசியமான பண்புகளை அறிந்துகொண்டு மாணவர்கள் அவற்றை வெளிப்படுத்தக்கூடியவாறு கட்டியெழுப்பப்பட்டுள்ளன. மேலும் அரச அதிகாரம் பகிரப்பட்டுள்ள முறையை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்புக்கள் பற்றிக் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அரசியல் கருத்தியல்கள் அரசியலில் செலுத்தும் தாக்கங்களை சமகால அரசியல் நிகழ்வுகளோடு ஒப்பிட்டு விபரிக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ளன.

அடுத்ததாக மோதல் மற்றும் மோதலைத் தீர்த்தல் எனும் செயன்முறையானது தற்கால உலகில் பரந்துவிரிந்த பல்துறைசார் கற்றல் துறையாக மாறியுள்ளமையால் மோதல் தொடர்பான இப்பாடத்தலைப்பானது இம் முறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பாடத்தலைப்புகளின் ஒழுங்குமுறையைக் கருத்திற் கொண்டு இத்தலைப்பானது 12 ஆம் தரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றின் மீது விசேட கவனம் செலுத்தி குடியேற்ற நாட்டாட்சிக் காலத்தின் பொருளாதார மற்றும் சமூகப் போக்குகளையும் அதன் விளைவுகளையும் 1947 முதல் 1972 ஆம் ஆண்டு வரையான அரசியல் அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கற்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தரம் 13 இல் காலத்திற்குத் தேவையானதும் அரசறிவியலில் மிகவும் தெளிவு பெறவேண்டிய ஜனநாயக அரசாங்கத்தின் கோட்பாட்டு அடிப்படை மற்றும் நடைமுறைகளைப் பகுத்தாராய்வதற்கும் அரசியலமைப்புக்களில் பயன்படுத்தப்படும் ஜனநாயக மற்றும் ஜனநாயகமற்ற பண்புகளை அறிந்துகொண்ட விமர்சகராக வருவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் தற்கால அரசியலமைப்புக்கள் ஒப்பீட்டு ரீதியான கற்கைக்குட்படுத்தப்பட்டுள்ளன. சமஷ்டி முறையிலமைந்த அரசியலமைப்புக்களுக்கு எடுத்துக்காட்டாக ஐக்கிய அமெரிக்க குடியரசு, இந்தியா மற்றும் சுவிட்சர்லாந்தும், ஒற்றையாட்சி அரசியலமைப்புக்களுக்கு உதாரணமாக பிரித்தானியா மற்றும் இலங்கையும், ஒற்றை மற்றும் மத்தியமயப்படுத்தப்பட்ட அரச கட்டமைப்புக்கு அமைவாகப் பிரான்சும் உள்ளடக்கப்

பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் இயக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பினை ஆழமாகக் கற்பதற்கும் அவ்வரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள 13,17,18 மற்றும் 19 ஆம் அரசியலமைப்புத் திருத்தங்களை காலத்தின் தேவை கருதிக் கற்பதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இறுதியாக இலங்கையின் அரசியல் கட்சி முறை பற்றியும், சர்வதேச அரசியலின் இயல்பு மற்றும் அதன் நவீன போக்குகள் இலங்கைக்குப் பொருந்துமாற்றையும் பகுத்தாராய்ந்து கற்பதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

புதிய அனுபவத்தோடு அரசறிவியலைக் கற்பதனூடாக கற்றற் பேறுகளைச் சிறப்பாக அடைந்து கொள்ளும் வகையில் அரசறிவியலின் நடைமுறை அம்சங்களை விளங்கிக் கொண்டு பிரசைகள் என்ற வகையில் தமது பங்களிப்புத் தொடர்பான மனப்பாங்கு மற்றும் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் இப் பாடத்திட்டத்தின் மூலம் மாணவ பரம்பரைக்கு வழிகாட்டப்பட்டுள்ளது.

# முன்னுரை

இலங்கையின் பாடத்திட்டத்தில் க.பொ.த (உ/த) பாடத்துறைக்காக இப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுப் புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. க.பொ.த (உ/த) அரசியல் விஞ்ஞான பாடமானது கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களதும் பாடத்தைக் கற்கும் மாணவர்களினதும் கருத்துக்கள் மற்றும் எண்ணங்களைப் பகுப்பாய்வு செய்து அவர்களுடைய பரிந்துரைகளையும் கவனத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாட உள்ளடக்கமானது பிரதான தேர்ச்சிகள் 15 இன் கீழ் தேர்ச்சி மட்டங்கள் பல கட்டியெழுப்பப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இப் பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளை அடைந்து கொள்வதற்காக 12, 13ம் தரங்களுக்காக எதிர்காலத்தில் இரண்டு ஆசிரியர் வழிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. அரசறிவியல் கோட்பாடுகளின் நடைமுறைப் பயன்பாடுகளை விமர்சன ரீதியாக கற்பதற்கு இதன் மூலம் மாணவர்களுக்கு வழியேற்படுகின்றது. க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளவும், பூரண அரசியல் அறிவுமிக்க சிறந்த பிரசைகளாக மாறுவதற்கும் இப்பாடத்திட்டம் பயனளிக்கும் என நம்புகின்றோம்.

- - - பாடத்திட்ட உருவாக்கற் குழு - - -

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்துணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

   தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழிநுட்பத் தகைமை.

   எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

   எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

   சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

   தகவல் தொழிநுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்துணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினைத் தீர்த்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
   - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
   - மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

   இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

   சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

   உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்
விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## பாடக்குறிக்கோள்கள்

இப்பாடத்திட்டத்தை வெற்றிகரமாகக் கற்பதால் மாணவர்கள் பின்வரும் திறன்களையும் ஆற்றல்களையும் அடைந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. கல்விசார் பாடம் என்ற வகையில் அரசறிவியலின் உள்ளடக்கத்தையும் அதன் கருப்பொருளையும் முக்கியத்துவத்தையும் இனங்காணல்.
2. தாம் வாழும் சூழலின், சமூகத்தின் மற்றும் உலகின் அரசியல் செயற்பாடுகளையும் அரசியல் நிறுவனங்களையும் அரசியல் மாற்றங்களையும் இனங்காணலும் அவற்றை விமரிசன ரீதியாக விளங்கிக் கொள்ளலும்
3. பிரசை என்ற வகையில் நாட்டிலும் உலகிலும் வாழும் போது முக்கியத்துவம் பெறும் அரசியல் விழுமியங்கள், நோக்கங்கள் மற்றும் மூலதத்துவங்கள் பற்றி அறிவூட்டம் பெறுதல்.
4. அரசறிவியலின் வரலாற்று ரீதியான மற்றும் சமகாலப் போக்குகளை அறிந்து கொள்ளல்.
5. நேர்க்கணிய சமூகமொன்றை உருவாக்கும் செயன்முறையில் அரசியல் மாற்றத்தின் பொருட்டு பிரசையென்ற வகையில் பங்களிப்பை நல்குவதற்குத் தேவையான விளக்கத்தையும் ஆற்றலையும் பெறுதல்.

## தேசிய இலக்குகளும் பாடத் தேர்ச்சிகளும்

| தேசிய இலக்குகள் | பாடக் குறிக்கோள்கள் | தேர்ச்சி மட்டம் |
|---|---|---|
| I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும். | 3. பிரசை என்ற வகையில் நாட்டிலும் உலகிலும் வாழும் போது முக்கியத்துவம் பெறும் அரசியல் விழுமியங்கள், நோக்கங்கள் மற்றும் மூலதத்துவங்கள் பற்றி அறிவூட்டம் பெறுதல் | 1.1 அரசியலானது சமூக வாழ்க்கையின் இன்றியமையாத ஓர் அங்கமாகும் என்பதை விளக்குவார்.<br>1.2 அரசறிவியலை அரசியலின் பல்வேறு அம்சங்களை கல்வி சார்ந்த வகையில் பயிலும் ஒரு பயில்வு ஊடகமாக விபரிப்பார்.<br>2.2 சமூகத்தின் அரசியல் வாழ்வில் அவற்றின் பணிகளை விமர்சிப்பார். |
| II. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும். | 4. அரசறிவியலின் வரலாற்று ரீதியான மற்றும் சமகாலப் போக்குகளை அறிந்து கொள்ளல். | 7.1 காலணித்துவ ஆட்சி முறையானது இலங்கையின் சமூக மற்றும் அரசியல் மாற்றத்திற்கு ஏதுவான விதத்தை விபரிப்பார்.<br>7.2 இலங்கையின் காலணித்துவ மாற்றங்களின் போதான அரசியல் எதிர் விளைவுகளை விளங்கிக் கருத்துரைப்பார்.<br>8.1 சுதந்திரத்தின் பின்னரான அரசியலமைப்பு உருவாக்திற்குப் பின்னணியாக அமைந்த காரணிகளை விபரிப்பார். |

| தேசிய இலக்குகள் | பாடக் குறிக்கோள்கள் | தேர்ச்சி மட்டம் |
|---|---|---|
| III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்கு - தலும் ஆதரித்தலும். | 5. நேர்கணிய சமூகமொன்றை உருவாக்கும் செயன்முறையில் அரசியல் மாற்றத்தின் பொருட்டு பிரசையென்ற வகையில் பங்களிப்பை நல்குவதற்குத் தேவையான விளக்கத்தையும் ஆற்றலையும் பெறுதல்.<br>3. பிரசை என்ற வகையில் நாட்டிலும் உலகிலும் வாழும் போது முக்கியத்துவம் பெறும் அரசியல் விழுமியங்கள், நோக்கங்கள் மற்றும் மூலதத்துவங்கள் பற்றி அறிவூட்டம் பெறுதல். | 6.2 மோதல் மற்றும் மோதல் தீர்வு தொடர்பான கோட்பாடு மற்றும் நடைமுறை அம்சங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>6.3 சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மீள்கட்டமைத்தலின் முக்கியத்துவம் தொடர்பில் விமர்சன ரீதியாக கருத்துத் தெரிவிப்பார்.<br>9.1 ஜனநாயக ஆட்சி முறையின் கோட்பாட்டு அடிப்படைகளை விளங்கிக் கொள்வார்.<br>9.2 ஜனநாயக ஆட்சி முறையின் நடைமுறைப் பாங்கைப் பகுத்தாராய்வார். |
| IV. ஒருவரது உள, உடல் நலனையும், மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலை - பேறுடைய வாழ்க்கை கோலத்தையும் மேம்படுத்தல். | 5. நேர்கணிய சமூகமொன்றை உருவாக்கும் செயன்முறையில் அரசியல் மாற்றத்தின் பொருட்டுப் பிரசையென்ற வகையில் பங்களிப்பை நல்குவதற்குத் தேவையான விளக்கத்தையும் ஆற்றலையும் பெறுதல். | 11.3 பொதுக் கொள்கை வகுக்கும் செயன் முறையில் பணிக்குழுவாட்சி முறையின் வகிபாகத்தை விளக்குவார். |
| V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை தற்துணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல் | 5. நேர்கணிய சமூகமொன்றை உருவாக்கும் செயன்முறையில் அரசியல் மாற்றத்தின் பொருட்டு பிரசையென்ற வகையில் பங்களிப்பை நல்குவதற்குத் தேவையான விளக்கத்தையும் ஆற்றலையும் பெறுதல். | 13.1 இலங்கையின் அரசியல் கட்சி முறையின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சி தொடர்பில் கருத்துத் தெரிவிப்பார்.<br>13.4 இலங்கையின் அரசியல் கடசி முறையின் பண்புகளையும் அதன் போக்குகளையும் விபரிப்பார். |

| தேசிய இலக்குகள் | பாடக் குறிக்கோள்கள் | தேர்ச்சி மட்டம் |
| --- | --- | --- |
| VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல். | 3. பிரசை என்ற வகையில் நாட்டிலும் உலகிலும் வாழும் போது முக்கியத்துவம் பெறும் அரசியல் விழுமியங்கள், நோக்கங்கள் மற்றும் மூலதத்துவங்கள் பற்றி அறிவூட்டம் பெறுதல். | 9.1 ஜனநாயக ஆட்சி முறையின் கோட்பாட்டு அடிப்படைகளை விளங்கிக் கொள்வார்.<br><br>9.2 ஜனநாயக ஆட்சி முறையின் நடைமுறைப்பாங்கைப் பகுத்தரராய்வார்.<br><br>12.2 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்திய திருத்தங்களுக்கான பின்னணிகளை விளங்கிக் கொள்வார்.<br><br>12.3 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களின் இயல்புகளை அறிந்து கொள்வார்.<br><br>13, 17, 18, 19 ஆம் திருத்தங்கள். |

| தேசிய இலக்குகள் | பாடக் குறிக்கோள்கள் | தேர்ச்சி மட்டம் |
|---|---|---|
| VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல். | 2. தாம் வாழும் சூழலின், சமூகத்தின் மற்றும் உலகின் அரசியல் செயற்பாடுகளையும் அரசியல் நிறுவனங்களையும் அரசியல் மாற்றங்களையும் இனங்காணலும் அவற்றை விமரிசன ரீதியாக விளங்கிக் கொள்ளலும் | 12.3 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களின் இயல்புகளை அறிந்து கொள்வார். 13, 17, 18, 19 ஆம் திருத்தங்கள்)<br>14.1 தேசிய மற்றும் சர்வ தேச அரசியலுக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காண்பார்.<br>15.3 இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் சமகால போக்கினைப் பகுத்தாய்வார்.<br>15.4 சமகால வெளியுறவுக் கொள்கையின் சவால்களையும் பிரச்சினை களையும் விளங்கிக் கொண்டு கருத்துத் தெரிவிப்பார். |

| தேசிய இலக்குகள் | பாடக் குறிக்கோள்கள் | தேர்ச்சி மட்டம் |
|---|---|---|
| VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல். | 3. பிரசை என்ற வகையில் நாட்டிலும் உலகிலும் வாழும் போது முக்கியத்துவம் பெறும் அரசியல் விழுமியங்கள், நோக்கங்கள் மற்றும் மூலதத்துவங்கள் பற்றி அறிவூட்டம் பெறுதல். | 14.1 தேசிய மற்றும் சர்வ தேச அரசியலுக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காண்பார்.<br>14.2 சர்வதேச அரசியலில் அரசு மற்றும் அரசு சாரா செயற் பாட்டாளர்களை இனங்கண்டு கருத்துத் தெரிவிப்பார்.<br>14.4 சர்வதேச அரசியலின் சமகாலப் போக்கு களை அடையாளங் கண்டு விளக்குவார்.<br>14.5 தேசிய மற்றும் சர்வ தேச அரசியலின் புதிய போக்குகள் தொடர்பில் இலங்கை மீது விசேட கவனம் செலுத்தி விபரிப்பார். |

## பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணை வாரியாகப் பிரித்துக் கொள்வதற்கான உத்தேசத் திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சி மட்டம் | பாடவேளை |
|---|---|---|---|
| 12 | I | 1.1, 1.2, 1.3, 2.1, 2.2, 3.1, 3.2, 3.3, 3.4 | 100 |
| | II | 4.1, 4.2, 5.1, 5.2, 6.1, 6.2 | 100 |
| | III | 7.1, 7.2, 8.1, 8.2, 8.3 | 100 |
| 13 | I | 9.1, 9.2, 10.1, 10.2, 11.1, 11.2, 11.3 | 100 |
| | II | 12.1, 12.2, 12.3, 13.1, 13.2 | 100 |
| | III | 14.1, 14.2, 14.3, 14.4, 14.5, 15.1, 15.2, 15.3, 15.4 | 100 |

# தரம் 12
# அரசறிவியல்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 1.1 அரசியல் மற்றும் அரசறிவியலின் இயல்பு தொடர்பில் அறிவூட்டமுள்ள பிரசையாகச் செயற்படுவார். | 1.1 அரசியலானது சமூக வாழ்க்கையின் இன்றியமையாத ஓர் அங்கமாகும் என்பதை விளக்குவார்.<br><br>1.2 அரசறிவியலை அரசியலின் பல்வேறு அம்சங்களை கல்வி சார்ந்த வகையில் பயிலும் ஒரு பயில்வு ஊடகமாக விபரிப்பார்.<br><br>1.3 பாடத்துறையோடு தொடர்புடைய தனித்துவமான பல்வேறு அணுகு முறைகளைப் பயன்படுத்தி அரசியலைப் பயில்வார். | 1.1 அரசறிவியலை அறிந்து கொள்ளல்<br>1.1 அரசியல் என்றால் என்ன?<br>1.2 அரசியலுக்கும் அரசறிவியலுக்கும் இடையிலான தொடர்புகள்<br>1.3 அரசறிவியலை கல்வி சார் பாடமொன்றாகப் பயிலுதல்<br>1.4 அரசறிவியலைக் கற்பதற்கான அணுகு முறைகள்<br>• தத்துவார்த்த (இலட்சியவாத) அணுகு முறை<br>• ஒப்பீட்டு அணுகு முறை<br>• பல்துறை அணுகு முறை<br>• விஞ்ஞான அணுகு முறை (நடத்தை வாதம்) | • அரசியலையும் அரசறிவியலையும் பொருள் விளக்கம் செய்வார்.<br>• அரசியலுக்கும் அரசறிவியலுக்கும் இடையிலான தொடர்புகளையும் வேறுபாடுகளையும் இனங்கண்டு விளக்குவார்.<br>• அரசறிவியலை கல்விசார் ரீதியில் கற்பதற்கான அணுகு முறைகளைப் பெயரிட்டு அவற்றை விபரிப்பார்.<br>• அரசறிவியலின் கற்றல் அணுகு முறைகளை விமர்சன ரீதியில் விசாரணை செய்வார்.<br>• அரசியலை கல்விசார் பாடமாக கற்பதால் தனக்கும் தனக்குரித்தான சமூகத்தின் அரசியல் செயற்பாட்டிற்கும் பங்களிப்புச் செய்யும் விதம் தொடர்பில் கருத்துரைப்பார். | 05<br><br><br><br><br><br><br>10<br><br><br><br><br>10 |

அரசறிவியல் பாடத்திட்டம் தரம் - 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • அரசியல் பொருளாதார அணுகுமுறை<br>• சமூகவியல் அணுகுமுறை<br>• பெண்ணியல் அணுகுமுறை | | |
| 2.0 அரசறிவியல் பாடத்தில் உள்ளடங்கும் கருப் பொருள்களை அறிந்து அரசறிவியலைக் கற்பதற்குத் தயாராவார். | 2.1 அரசறிவியல் பாடத்துறைக்குட்பட்ட கருப்பொருள்களின் இயல்புகளையும் உள்ளடக்கத்தையும் கற்பார்.<br><br>2.2 சமூகத்தின் அரசியல் வாழ்வில் அவற்றின் பணிகளை விமர்சிப் பார். | 2.0 அரசறிவியல் பாடத்துறைக்குட்பட்ட கருப்பொருள்கள்<br>2.1 அரசியல் தத்துவம்<br>2.2 அரசியல் சிந்தனை களும் கருத்தியல்களும்<br>2.3 அரசியல் கோட்பாடுகள்<br>2.4 அரசியல் நிறுவனங்கள்<br>I. அரசும் அரசாங் - கமும்<br>II. அரசியல் கட்சிகள்<br>III. அமுக்கக் குழுக் - கள்<br>IV. சிவில் சமூகம் | • அரசறிவியல் பாடப்பரப்பில் உள்ளடங்கும் கருப்பொருள் களைப் பெயரிட்டு விளக்குவார்.<br>• அவ்வொவ்வொரு கருப் பொருள்களும் அரசறிவியற் கற்கைப் பாடத் துறையை முழுமைப்படுத்தும் விதத்தை விளக்குவார்.<br>• அக்கருப்கருப்பொருள்கள் தொடர்பிலான தெளிவினை, அரசியல் உலகு தொடர்பில் விமர்சன ரீதியாக சிந்திப் பதற்குப் பயன்படுத்துவார். | 10<br><br>10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | 2.5 ஒப்பீட்டு அரசியல்<br>2.6 பொது நிர்வாகம்<br>2.7 உலக அரசியலும் சர்வதேச உறவுகளும்.<br>2.8 முரண்பாடும் முரண்பாடு இணக்கப்படுத்தலும் | | |
| 3.0 தான் பிரசையாக உள்ள அரசு தொடர்பில் கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அடித்தளத்தை இடுவார். | 3.1 அரசு எனும் எண்ணக் கருப்பொருளை விளக்குவார். | 3.0 அரசு<br>3.1 அரசும் அதன் வகிபாகமும்<br>• சமூகத்தில் நிலவும் அரசியல் அதிகாரத்தின் மையப்படுத்திய வெளிப்பாடாக அரசு<br>• நவீன ஆள்புல அரசு<br>• நவீன தேசிய அரசு<br>• உலக மயமாக்கமும் அரசும் | • அரசை வரைவிலக்கணப் படுத்தி அதன் பணிகளை விபரிப்பார்.<br>• நவீன ஆள்புல அரசு மற்றும் தேசிய அரசினது பண்புகளை அறிந்து கொள்வார்.<br>• உலக மயமாக்கமானது அரசின் மீது செலுத்தியுள்ள தாக்கத்தினை விமர்சனம் செய்வார். | 10 |
| | 3.2 அரசு பற்றிய வகை படுத்தலை அடிப்படையாகக் கொண்டு அரசுப் பற்றிய கருத்தியலை விமர்சிப்பார். | 3.2 அரசின் மாதிரிகளும் அதன் வகைகளும்<br>• கோத்திர அரசு<br>• கிரேக்க நகர அரசு<br>• முடியாட்சி<br>• காலனித்துவ அரசு<br>• தாராண்மை ஜனநாயகம் | • அரச மாதிரிகளை வகைப் படுத்திப் பகுத்தாராய்வார்.<br>• அரசு, இறைமை மற்றும் பிரசை ஆகிய எண்ணக்கருக் களை விளக்குவார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • சமவுடைமை<br>• பாசிச வாதம்<br>• பின் காலனித்துவம்<br>• நவ தாராண்மை வாதம் | | |
| | 3.3 அரசு தொடர்பான அரசியல் எண்ணக் கருக்களை அடிப்படை யாகக் கொண்டு நவீன அரசின் மாதிரி(மாதிரிகை)களை பகுத்தாய்வார். | 3.3 அரசு பற்றிய அரசறிவியல் எண்ணக்கருக்கள்<br>• அரசும் இறைமையும்<br>• அரசும் குடியுரிமையும்<br>• அரசு, அரசாங்கம் மற்றும் ஆட்சித்துறை ஆகியவற்றுக்கிடையி லான தொடர்புகளும் வேறுபாடுகளும் | | 10 |
| | 3.4 அரசையும் அதன் இயல்புகளையும் அரசியல் எண்ணக்கருக்கள் மற்றும் கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு பகுத்தாய்வார். | 3.4 அரசின் இயல்பு பற்றிய கோட்பாட்டு ரீதியான அணுகுமுறைகள்<br>• சமூக ஒப்பந்தக் கோட்பாடு<br>• மாக்சிய கோட்பாடு<br>• தாராண்மை வாதம்<br>• பெண்ணியல் வாதம் | • அரசின் இயல்பு பற்றிய கோட் பாட்டு அணுகு முறைகளைப் பெயரிட்டு விளக்குவார்.<br>• மனித சுதந்திரத்தை மேம்படுத் துவதற்கு அரசுக்கு மிகவும் அத்தியாவசிமான பண்புகளை இனங்கண்டு கூறுவார்.<br>• | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 4.0 உலகில் நிலவும் அரசியலமைப்பு மாதிரிகளின் அடிப்படையில் அரசியலமைப்புகளைப் பகுத்தாயும் ஆற்றலை வெளிப்படுத்துவார். | 4.1 அரசின் அதிகாரப் பகிர்வுக்கு ஏற்ப அரசியல் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ள முறையினை விபரிப்பார். | 4.0 அரசியலமைப்பு மாதிரிகள்<br>4.1 அரச அதிகாரத்தைப் பகிரும் முறையினை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு மாதிரிகள்<br>• ஒற்றையாட்சி<br>• சமஷ்டியாட்சி (கூட்டாட்சி)<br>• பாதி சமஷ்டி (அர்த்த சமஷ்டி)<br>• கூட்டுச்சமஷ்டி (கூட்டாண்மை சமஷ்டி) | • அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அரசியலமைப்புகளை அடையாளம் கண்டு பொருள் விளக்கம் செய்வார்.<br>• அவற்றின் பண்புகளையும் நன்மை தீமைகளையும் சுட்டிக் காட்டுவார்.<br>• நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைந்துள்ள விதத்திற்கு ஏற்ப அரசியலமைப்பு மாதிரிகளை அடையாளம் கண்டு பொருள் விளக்கம் செய்வார். | 15 |
| | 4.2 நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைக்கப் பட்டிருக்கும் முறையினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு முறையினை விபரிப்பார். | 4.2 நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைந்துள்ள விதத்திற்கு ஏற்ப காணப்படும் அரசியலமைப்பு மாதிரிகள்<br>• அமைச்சரவை (மந்திரி சபை) முறை<br>• ஜனாதிபதித்துவ முறை<br>• கலப்பு முறை<br>• அனைத்தாண்மை முறைமை | • ஒவ்வொரு அரசியல் அமைப்புக்களினதும் பயனுறுதியை ஒப்பீட்டுரீதியாக கருத்துரைப்பார்.<br>• இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின் பண்புகளை தாம் கற்றறிந்துள்ள அரசியலமைப்பு மாதிரிகளின் துணையுடன் பகுத்தாய்வார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 அரசியல் கருத்தியல்களின் இயல்பை விளங்கிக் கொண்டு நவீன அரசியல் செயன்முறை மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் தீர்மானிப்பதற்கு அவை ஆற்றியுள்ள பணிகளை விளங்கிக் கொண்டு வெளிப்படுத்துவார். | 5.1 பல்வேறு அரசியல் கருத்தியல்களை விளங்கிக் கொள்வார்.<br><br>5.2 அவற்றின் அடிப்படைப் பண்புகள் மற்றும் அரசியல் துறையில் அவற்றின் செயற்பாடுகளை விமர்சன ரீதியாக விளக்குவார். | 5.0 அரசியல் கருத்தியல்கள்<br>• தாராண்மைவாதம்<br>• சமவுடைமை வாதம்<br>• குடியரசுவாதம் வாதம்<br>• சமூக ஜனநாயக வாதம்<br>• பாசிச வாதம்<br>• தேசிய வாதம்<br>• மதசார்பின்மை வாதம்<br>• பெண்ணியல் வாதம் | • அரசியல் கருத்தியல்கள் என்பதற்கு பொருள் விளக்கமளிப்பார்.<br>• அவ்வரசியல் கருத்தியல்களை ஒப்பிட்டு விபரிப்பார்.<br>• அவ்வரசியல் கருத்தியல்கள் அரசியல் நிகழ்வுகளைப் பாதிக்கும் விதத்தை அரசியல் சம்பவங்களின் துணை கொண்டு விபரிப்பார்.<br>• மிகச் சிறந்த அரசியல் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு இந்த அறிவினை துணையாகக் கொள்வார். | 15<br><br>15 |
| 6.0 மோதலின் இயல்பை விளங்கிக் கொண்டு மோதல் தீர்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதன் அவசியத்தை வெளிப்படுத்துவார். | 6.1 மோதல் மற்றும் மோதல் இணக்கம் தொடர்பான கோட்பாடு மற்றும் நடைமுறை அம்சங்களைத் தெளிவுபடுத்துவார். | 6.0 மோதலும் மோதல் இணக்கமும்<br>6.1 மோதல் தொடர்பான வரைவிலக்கணங்களும் வகைப்படுத்தல்களும் | • மோதலை வரைவிலக்கணப் படுத்தி வகைப்படுத்துவார்.<br>• மோதல் தீர்வு முறைகளைக் வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• மோதலைத் தீர்ப்பதில் முன் எச்சரிக்கை வழங்கப்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.2 சமாதானத்தைக் கட்டி யெழுப்புதல் மற்றும் மீள் கட்டமைத்தலின் முக்கியத்துவம் தொடர்பில் விமர்சன ரீதியாகக் கருத்துத் தெரிவிப்பார். | 6.2 மோதல் இணக்கப்பாட்டு செயன்முறை<br>• முன் எச்சரிக்கை செய்தல்<br>• மோதலை தவிர்த்தல்<br>• மோதல் முகாமைத்துவம்<br>• மோதல் நிலை மாற்றம்<br>• மோதலுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டி யெழுப்புதல்<br><br>6.3 மோதல் இணக்க வழி முறைகள்<br>• பேச்சுவார்த்தை<br>• மத்தியஸ்தம் செய்தல்<br>• சமாதான உடன்படிக்கைகள்<br>• சமாதானத்தைக் கட்டி யெழுப்புதல் | • மோதலைத் தவிர்ப்பதற்கு முன் வருவார்.<br>• மோதல் முகாமைத்துவத்தில் தானும் ஒரு பங்காளராகச் செயற்படுவார்.<br>• மோதல் நிலை மாற்றத்தை விமர்சன ரீதியாக நுணுகி ஆய்வார்.<br>• மோதல் இணக்கப்பாட்டு ஊடகங்களை விளக்குவார்.<br>• சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பதை வரையறுப்பார்.<br>• மோதல் இணக்கப்பாடும், சமாதானத்தை கட்டியெழுப்பு தலும் சமகால உலகில் கொண்டுள்ள பொருத்தப்பாடு தொடர்பில் விளக்குவார்.<br>• தமது வாழ்வில் அனுபவிக்கும் மோதல்களைச் சாதகமான விளைவுகள் ஏற்படும் வகையில் மாற்றுவதற்கு முயல்வார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | 6.4 சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்<br>• வரைவிலக்கணம் மற்றும் அணுகுமுறைகள்<br>• மீள் கூட்டமைத்தல் | | 25 |
| 7.0 இலங்கையில் குடியேற்ற நாட்டாட்சிக்காலத்தில் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றங்களை அறிந்து கொள்வார். | 7.1 குடியேற்றவாதமும், குடியேற்ற ஆட்சி முறையும் இலங் கையின் சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்திற்கு ஏதுவான விதத்தை விபரிப்பார்.<br><br>7.2 இலங்கையின் காலனித்துவ மாற்றங்களின் போதான எதிர் விளைவுகளை விளங்கிக் கருத்துரைப்பார். | 7.0 குடியேற்றவாதமும் அதன் விளைவுகளும்<br>7.1 பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள்<br>• குடியேற்றவாத முதலாளித்துவத்தின் ஆரம்பமும் அதன் பரவலும்<br>• குடியேற்றவாத சமூகமாற்றமும் புதிய சமூக வகுப்புக்களின் தோற்றமும்<br>7.2 அரசியல் விளைவுகள்<br>• நவீன அரசுக்கான அடித்தளம் இடப்படல்<br>• பிரதிநிதித்துவ ஜனநாய கத்தின் தோற்றம் (டொனமூர் அரசியல் சீர்திருத்தம் மீது விசேட கவனஞ் செலுத்துக.) | • குடியேற்றவாத நிலைமாற்றத்தின் பொருளாதார மற்றும் சமூக செல்நெறியின் போக்குகள் மற்றும் விளைவுகளை விபரிப்பார்.<br>• இலங்கையில் நவீன அரசுக்கு அடித்தளமிடப்பட்ட விதத்தை விளக்குவார்.<br>• இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் ஆரம்பத் தையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுவார்.<br>• டொனமூர் அரசியலமைப்பின் விசேட இயல்புகளை பகுத்தாய்வார். | 25<br><br>25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 8.0 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்பு வளர்ச்சி தொடர்பான விளக்கத்தை வெளிப்படுத்துவார். | 8.1 சுதந்திரத்தின் பின்னரான அரசியலமைப்பு உருவாக்கத்திற்குப் பின்னணியாக அமைந்த காரணிகளை விபரிப்பார்.<br><br>8.2 மேற்படி அரசியலமைப்புகளின் பண்புகளைத் தனித்தனியாக விளக்குவார்.<br><br>8.3 மேற்படி அரசியல் அமைப்புகளின் போக்குகளையும் பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டுவார். | 8.0 வெஸ்ட்மின்ஸ்டர் (மந்திரி சபை) மாதிரியும் அதில் ஏற்பட்ட மாற்றங்களும்<br>8.1 1947 - 1972 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியலமைப்பு வளர்ச்சியும் அதன் போக்குகளும்<br>8.2 சட்டத்துறையின் அமைவுச் சேர்க்கையும் இறையாண்மையும் (1947 - 1972)<br>8.3 நிறைவேற்றுத் துறையின் இயல்பும் அதன் அதிகாரங்களும் (1947 - 1972)<br>8.4 சிறுபான்மை மக்களின் உரிமைகள் (1947 - 1972)<br>8.5 நீதித்துறையும் அரச சேவையும் (பொதுச் சேவை) (1947 - 1972)<br>8.6 அடிப்படை உரிமைகள் (1947 - 1972) | • 1947 - 1972 வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியலமைப்பு வளர்ச்சியையும் அதன் போக்குகளையும் பகுத்தாய்வார்.<br>• 1947 - 1972 வரையிலான அரசியலமைப்பின் கீழ் காணப்பட்ட சட்டத்துறையின் அமைப்பையும் இறையாண்மையையும் ஒப்பிட்டு தெளிவுப்படுத்துவார்.<br>• 1947 - 1972 வரையிலான அரசியல் அமைப்பின்கீழ் நிறைவேற்றுத் துறையின் இயல்பையும் அதன் அதிகாரங்களையும் ஒப்பிட்டு விளக்குவார்.<br>• சிறுபான்மையினர் உரிமைகளின் தன்மையையும் வரையறைகளையும் எடுத்துக் காட்டுவார்.<br>• நீதித்துறையின் சுயாதீனத்தையும் அதன் வரையறைகளையும் எடுத்துக் காட்டுவார். | 10<br><br>10<br><br>30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • நீதித்துறை மற்றும் அரச சேவை ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களைப் பரீட்சிப்பார்.<br>• மிகச்சிறந்த அரசியலமைப் பொன்றில் இருக்க வேண்டிய பண்புகளை விசாரணை செய்வார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 9.0 ஜனநாயக ஆட்சிமுறை தொடர்பான விளக்கத்தை வெளிப்படுத்துவார். | 9.1 ஜனநாயக ஆட்சிமுறையின் கோட்பாட்டு அடிப் படைகளை விளங்கிக் கொள்வார்.<br><br>9.2 ஜனநாயக ஆட்சி முறையின் நடை முறைப்பாங்கைப் பகுத்தாராய்வார். | 9.0 ஜனநாயக ஆட்சிமுறை<br>9.1 ஜனநாயக ஆட்சி முறையின் எண்ணக்கரு ரீதியான அடிப்படைகள்<br>• தாராண்மை (லிபரல்) ஜனநாயகம்<br>• பிரதிநிதித்துவ ஜனநாயகம்<br><br>9.2 ஜனநாயக ஆட்சி முறையும் அதன் பண்புகளும்<br>• யாப்புறு வாதம்<br>• மக்கள் இறைமை<br>• அதிகாரப் பகிர்வு<br>• தடைகளும் சமன்பாடுகளும்<br>• சட்டவாட்சி<br>• மனித உரிமைகள்<br>• வரையறுக்கப்பட்ட அரசாங்கம்<br>• சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்<br>• மக்களுக்குப் பொறுப்புக் கூறல் | • ஜனநாயக ஆட்சி முறையின் பண்புகளை இனங்கண்டு விவரிப்பார்.<br>• எமது நாட்டின் அரசியலமைப்பில் உள்ள ஜனநாயக பண்புகளையும் ஜனநாயகமற்ற பண்புகளை விமர்சன ரீதியாக எடுத்துக் காட்டுவார்.<br>• ஜனநாயக அரசியலமைப்பு இலங்கைக்குப் பொருந்துமாற்றை விளக்குவார். | 28 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 10. சமகால உலகில் நிலவும் பல்வேறு அரசியலமைப்பு மாதிரிகள் தொடர்பில் ஒப்பீட்டு ரீதியான விளக்கம் உடைய பிரசையாக செயற்படுவார். | 10.1 சமகால உலகில் ஒற்றை மற்றும் சமஷ்டியாட்சி அரசியலமைப்பு முறைகளின் தனித்துவம் மற்றும் வேறுபாடுகளை விபரிப்பார்.<br><br>10.2 ஒப்பீட்டு ரீதியில் பல் வேறு அரசியலமைப்பு மாதிரிகளின் கோட்பாட்டு ரீதியான அடிப்படைகளையும் நடைமுறைப் பண்புகளையும் ஒப்பீட்டு ரீதியாகக் கற்பார். | 10. சமகால அரசியலமைப்பு மாதிரிகள்<br>10.1 சமஷ்டி மாதிரிகள்<br>• அமெரிக்க முறைமை<br>• இந்திய முறைமை<br>• சுவிட்சர்லாந்து முறைமை<br>10.2 ஒற்றையாட்சி அரசுகளின் நிலைமாற்றம்<br>• பிரித்தானியா<br>• இலங்கை<br>10.3 ஒற்றையாட்சி மற்றும் மத்திய மயப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு<br>• பிரான்சு | • சமகால உலகில் நிலவும் சமஷ்டி அரசியல் அமைப்பு மாதிரிகளைப் பெயரிட்டு, பகுத்தாய்வார்.<br>• ஒற்றையாட்சி அரசுகளின் மாதிரிகள் தொடர்பில் பிரித்தானியா, இலங்கையை அடிப்படையாகக் கொண்டு எடுத்துக் காட்டுவார்.<br>• ஒற்றையாட்சி மற்றும் மத்திய மயப்படுத்தப்பட்ட அரசியலமைப்புக்களை உதாரணங்களுடன் விவரிப்பார்.<br>• இலங்கைக்கு மிகவும் பொருத்தமான அரசியலமைப்பு மாதிரியின் அடிப்படை அம்சங்களை முன்மொழிவதற்கான திறன்களைப் பெறுவார். | 20<br><br>20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 11.0 பொதுக் கொள்கையானது அரசியல் செயன்முறையின் ஒரு விளைவாகும் என்பதை வெளிப்படுத்துவார். | 11.1 அரசியலையும் பொதுக் கொள்கைகளையும் தொடர்புபடுத்தும் செயன்முறையை விபரிப்பார். | 11.0 பொதுக் கொள்கையும் அரசியல் செயன்முறையும்<br>11.1 பொதுக் கொள்கை - வரை விலக்கணமும் அதனைப் பயில்வதன் முக்கியத்துவமும் | • பொதுக் கொள்கை (அரச கொள்கை) என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• பொது கொள்கைகளைப் பயிலுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார். | 10 |
| | 11.2 பொதுக் கொள்கை தொடர்பில் அரசியல் கட்சிகளினதும் சிவில் சமூகத்தினதும் பணிகளை நுணுகியாராய்வார். | 11.2 பொதுக் கொள்கையும் அரசியல் அதிகார மையங்களும் | • பொதுக் கொள்கைக்கும் அரசியல் செயன்முறைக்கும் இடையிலான தொடர்பை விபரிப்பார். | 05 |
| | 11.3 பொதுக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் செயன்முறையில் பணிக்குழுவாட்சி முறையின் வகிபாகத்தை விளக்குவார். | 11.3 பொதுக் கொள்கையும் அரசியல் கட்சிகளும்<br>11.4 பொதுக் கொள்கையும் சிவில் சமூகமும்<br>11.5 பொதுக் கொள்கையும் பணிக்குழுவாட்சி முறையும் | • பொதுக் கொள்கை தொடர்பில் அரசியல் கட்சிகளினதும் சிவில் சமூகத்தினதும் பணிகளை விபரிப்பார்.<br>• பொதுக் கொள்கைகளுக்கும் பணிக் குழுவாட்சி முறைக்கும் இடையிலான தொடர்புகளை எடுத்துக்காட்டுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 12.0 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப் பட்ட அரசாங்கத்தின் கட்டமைப்பு ரீதியான பண்புகளையும், நிறுவனங்களின் அமைவுச்சேர்க்கையையும்,அதிகார சமநிலையையும் இனங்கண்டு தெளிவுபடுத்துவார். | 12.1 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு கட்டமைப்பு, அதிகாரக் குவிவு மற்றும் நிறுவனங்களின் அமைவுச்சேர்க்கைப் பற்றிக் கற்றாய்வார்.<br>12.2 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் கட்டமைப்பு ரீதி - யிலான மாற்றங்களை ஏற்படுத்திய திருத்தங்களுக்கான பின்னணிகளை விளங்கிக் கொள்வார்.<br>12.3 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களின் இயல்புகளை அறிந்து கொள்வார். 13, 17, | 12.1 மேற்படி அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பும் நிறுவன ரீதியான பண்புகளும்<br>• நிறைவேற்றுத்துறை<br>• சட்டவாக்கத்துறை<br>• சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான தொடர்புகள்<br>• நீதித்துறைச் சுதந்திரம் தொடர்பான கோட்பாடுகளும் நடைமுறையும்.<br>• நிறைவேற்றுத்துறையும் பொதுச் சேவையும்<br>• நிறைவேற்றுத்துறையும் அதிகாரக் குவிவும்<br>• அடிப்படை உரிமைகள் நீதிமன்றம், குறைகேள் அதிகாரி<br>• தேர்தல் முறைமை<br>• மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு (மக்கள் தீர்ப்பு) | • 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் நிறைவேற்றுதுறையின் இயல்புகள், அதிகாரங்கள், பணிகளை விவரிப்பார்.<br>• சட்டவாக்கத்துறையின் இயல்பு, அதிகாரங்கள், பணிகளை விபரிப்பார்.<br>• சட்டவாக்கத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான தொடர்பை விளக்குவார்.<br>• நீதித்துறை சுதந்திரம் பற்றிய கோட்டுபாடுகளையும் அதன் நடைமுறையையும் நுணுகி ஆராய்வார்.<br>• நிறைவேற்றுத் துறைக்கும் பொதுச்சேவைக்கும் இடையிலான தொடர்பினையும் அது அரச சேவையில் தாக்கம் செலுத்திய விதம் பற்றியும் கருத்துத் தெரிவிப்பார்.<br>• நிறைவேற்றுத் துறையில் இடம்பெற்றுள்ள அதிகாரக் குவிப்பு தொடர்பாகவும் அதன் விளைவுகளையும் விபரிப்பார். | 50<br>10<br>10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 18, 19 ஆம் திருத்தங்கள்) | 12.2 13, 17, 18, 19ம் அரசியலமைப்புத் திருத்தங்களின் பின்னணியும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு கட்டமைப்பில் அதன் தாக்கங்களும். | • அடிப்படை உரிமைகள், நீதித்துறை, குறைகேளதிகாரி தொடர்பில் காணப்படும் அரசியலமைப்பு ஏற்பாடுகளை விவரிப்பார்.<br>• பல்வேறு தேர்தல் முறை மற்றும் பொது மக்களின் பிரதிபலிப்புகளை ஒப்பிட்டு விபரிப்பார்.<br>• அரசியலமைப்புச் சீர்த்திருத்தம் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் விளைவுகளை விபரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 13.0 இலங்கையின் அரசியல் கட்சி முறையின் இயல்பையும் போக்குகளையும் அவற்றின் செயற்பாடுகளுடாக விபரிப்பார். | 13.1 இலங்கையின் அரசியல் கட்சி முறையின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சி தொடர்பில் கருத்துத் தெரிவிப்பார். | 13. இலங்கையின் அரசியல் கட்சி முறை<br>13.1 கட்சிமுறையின் தோற்றமும் போக்குகளும்<br>• ஆதிக்கமுள்ள இரு கட்சி முறை<br>• இடதுசாரி மற்றும் சிறிய கட்சிகள்<br>• இனத்துவக் கட்சிகள்<br>• அரசியல் கட்சிகளும் கூட்டுகளும்<br>• அரசியல் கட்சி முறைகளும், அரசியல் தலைமைத்துவமும் | • அரசியல் கட்சிமுறையின் ஆரம்பத்தையும் அதன் வளர்ச்சியையும் விளக்குவார்.<br>• கட்சிமுறையின் பண்புகளையும் அதன் போக்குகளையும் குறிப்பிடுவார்.<br>• ஆதிக்கமுள்ள இருகட்சிமுறையினை அறிந்துக்கொண்டு அது தொடர்பில் கருத்துத் தெரிவிப்பார்.<br>• இடதுசாரி மற்றும் சிறு கட்சிகள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார். | 10 |
| | 13.2 இலங்கையின் அரசியல் கட்சி முறையின் பண்புகளையும் அதன் போக்குகளையும் விபரிப்பார். | | • இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளை அடையாளங்கண்டு அவற்றை விபரிப்பார்.<br>• கூட்டணி அரசாங்கம் உருவாவதற்கு அரசியல் கட்சி முறைமை உதவிய விதத்தை நுணுகி ஆராய்வார்.<br>• அரசியல் கட்சி முறைமைக்கும் அரசியல் தலைமைத்துவத்துக்கும் இடையிலான தொடர்பின் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | இயல்பை எடுத்துரைப்பார்.<br>• இலங்கையின் அரசியல் கட்சி முறையின் பலம், பலவீனங்களை அறிந்து கொண்டு சிறந்த கட்சிமுறை ஒன்றினை பிரேரிக்கும் ஆற்றலைப் பெறுவார். | |
| 14. சர்வதேச அரசியலின் இயல்பையும் போக்கையும் அறிந்து கருத்துத் தெரிவிப்பார். | 14.1 தேசிய மற்றும் சர்வதேச அரசியலுக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காண்பார். | 14. சர்வதேச அரசியல்<br>14.1 தேசிய மற்றும் சர்வதேச அரசியலின் வேறுபாடுகள் | • தேசிய மற்றும் சர்வதேச அரசியலுக்கிடையிலான வேறுபாடுகளை அடையாளம் கண்டு விளக்கமளிப்பார். | 04 |
| | 14.2 சர்வதேச அரசியலில் அரசு மற்றும் அரசு சாரா செயற்பாட்டாளர்களை இனங்கண்டு கருத்துத் தெரிவிப்பார். | 14.2 சர்வதேச அரசியலில் அரசு மற்றும் அரசு சாரா செயற்பாட்டாளர்கள்<br>I தேசிய அரசு<br>II சர்வதேச அரசசார் அமைப்புகள<br>III சர்வதேச அரசசார் பற்ற அமைப்புகள்<br>IV பல்தேசியக் கம்பனிகள்<br>V பிரபலம்மிக்க நபர்கள் | • சர்வதேச அரசியலில் முக்கியத்துவம் பெறும் நிறுவனங்களையும் நபர்களையும் இனங்காண்பார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | VI பயங்கரவாதக் குழுக்களும் அமைப்புக்களும் | | |
| | 14.3 தேசிய அதிகாரம் மற்றும் தேசிய அபிலாசைகளின் தன்மையை விளக்குவார். | 14.3 தேசிய அதிகாரம் மற்றும் தேசிய அபிலாசைகள் | • தேசிய அதிகாரம், தேசிய அபிலாசை ஆகியவற்றை வரை விலக்கணப்படுத்துவார். | 06 |
| | 14.4 சர்வதேச அரசியலின் சமகாலப் போக்குகளை அடையாளங் கண்டு விளக்குவார். | 14.4 சமகால உலக அரசியலின் பிரதான போக்குகள்<br>I பல்துருவ உலக ஒழுங்கு<br>II மாற்று சர்வதேச தொடர்பு வலையமைப்பு<br>III புதிய சமூக இயக்கங்கள்<br>IV உலக முறைக்கு எதிரான கிளர்ச்சி இயக்கங்கள் | • தற்கால உலக அரசியலின் புதிய போக்குகளை விவரிப்பார். | 10 |
| | 14.5 தேசிய மற்றும் சர்வதேச அரசியலின் புதிய போக்குகள் தொடர்பில் இலங்கை மீது விசேட கவனம் செலுத்தி விபரிப்பார். | 14.5 புதிய உலக அரசியல் போக்குகள் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தும் விதம் | • உலக அரசியலின் புதிய போக்குகள் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விளக்குவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 15.0 வெளி உலகத்துக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் தொடர்புகளின் இயல்புகளையும் விளைவுகளையும் விளங்கிக்கொண்டு கருத்துத் தெரிவிப்பார். | 15.1 சுதந்திரத்தின் பின் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் செயற்பாட்டில் பாதிப்பு செலுத்திய காரணிகளை விபரிப்பார். | 15. இலங்கையும் உலகமும்<br>15.1 இலங்கையின் வெளியுறவுக் கொள்கை | • இலங்கையின் வெளியுறவு கொள்கை மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விபரிப்பார். | 05 |
| | 15.2 சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் பண்புகளையும் போக்குகளையும் விளக்குவார். | 15.2 இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் | • வெளியுறவுக் கொள்கையின் பண்புகளையும் புதிய போக்குகளையும் விசாரணை செய்வார். | 10 |
| | 15.3 இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் சமகால போக்கினைப் பகுத்தாய்வார். | 15.3 இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் பண்புகள் | • இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் சமகாலப் போக்குகள் யாதென அறிந்துக் கொள்வார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 15.4 சமகால வெளியுறவுக் கொள்கையின் சவால் களையும் பிரச்சினை களையும் விளங்கிக் கொண்டு கருத்துத் தெரிவிப்பார். | 15.4 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் சமகாலப் போக்குகள்<br>• ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கையும்<br>• பொது நலவாயமும் இலங்கையும்<br>• அணிசேரா இயக்கமும் இலங்கையும்<br>• தெற்காசிய பிராந்தியத் திற்கான ஒத்துழைப்பு அமைப்பும் (சார்க்) இலங்கையும்<br>• சர்வதேச பொருளாதார நிதி நிறுவனங்களும் இலங்கையும்<br>• சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் இலங்கையும்<br><br>15.5 தற்கால வெளியுறவு கொள்கையின் சவால் களும் பிரச்சினைகளும் | • இலங்கை சர்வதேச அமைப்புக் களில் ஓர் உறுப்பினர் என்ற வகையில் பெற்றுக் கொள்ளும் நன்மைகளையும் இலங்கை மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களையும் விளக்கு வார்.<br><br>• சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இலங் கைக்குமிடையிலான தொடர்பு களையும் சவால்களையும் விபரிப்பார்.<br><br>• சர்வதேச அரசியலின் புதிய போக்குகள் இலங்கைக்கு அவசியமாகும் விதத்தை விசாரணை செய்வார். | |

## பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தேசிய கல்விக் குறிக்கோள்களை அடையக்கூடிய வகையில தயாரிக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பாடக்கருத்துக்களை மிகவும் வெற்றிகரமான கற்றல் அனுபவங்களாக மாற்றிக் கொள்ளும் பொருட்டு பாடத்தைக் கற்கும் ஒவ்வொரு மாணவரும் பங்குபற்றக் கூடிய கற்றல் செயற்பாடுகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவது பாடசாலை நிருவாகத்தின் பொறுப்பாகும். அவ்வாறான செயற்பாடுகளில் சில பின்வருமாறு:

- அரசறிவியல் மன்றத்தை உருவாக்குதலும் அதனூடாக அறிவுப் புதிர், விவாத அரங்கு, கண்காட்சி, சுவர்ப்பத்திரிகை, தவணை வெளியீடுகள் போன்ற புத்தாக்க செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.
- பாட உள்ளடக்கத்தில் கற்றலிற்குட்படும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணிகள் பற்றி அறிந்து கொள்வதற்காகக் களச்சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்.
- அரசியல் கருத்தியல்கள், கோட்பாடுகளை ஆய்ந்தோய்ந்து கற்பதற்காகச் சிற்றளவு ஆய்வுச் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல்.
- பிரதேசத்திலுள்ள பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களுடன் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதில் ஈடுபடுத்தல்.
- சர்வதேச சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளம் மூலம் அறிவை மேம்படுத்தல்.

## கற்றல் கற்பித்தல் முறையியல்

அரசறிவியல் பாடத்திற்கமைவாக வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்கான முறையியல்கள் பின்வருமாறு,

- சிந்தனைக் கிளறல் கலந்துரையாடல்
- சஞ்சிகை ஆக்கம்
- வினாவிடைப்புத்தகம் தயாரித்தல்
- விவாதங்களை நடாத்துதல்
- கையேடுகளைத் தயாரித்தல்
- திறந்தநூல் பரிசீலனை
- பட்டிமன்றம்
- பாத்திரமேற்று நடித்தல்
- பிரயோகச் செயற்பாடுகள் உதாரணமாக மாதிரித் தேர்தல் ஏற்பாடு செய்தல்
- முன்வைப்பு (Presentation)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்திற்கமைவாக ஒவ்வொரு தவணைக்குமான தேர்ச்சிகள் மற்றும் தேர்ச்சி மட்டங்களுக்கேற்ப வழிகாட்டலாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சில முன்வைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் இத்திட்டங்களுடன் சுயமான செயற்பாடுகளையும் உருவாக்கிப் பயன்படுத்தலாம்.

- மேற்படி பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தேசிய மட்டப் பரீட்சை முதற்றடவையாக 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்படவுள்ளது.

- மேற்படி பரீட்சைக்கான வினாத்தாளின் கட்டமைப்பும், இயல்பும் தொடர்பிலான விளக்கம் பரீட்சைகள் திணைக்களத்தால் வழங்கப்படும்.

## பாடத்திட்ட அபிவிருத்திக் குழு

### பாடஒருங்கிணைப்பு

| | | |
|---|---|---|
| திருமதி. டபிள்யூ.ஏ.கே. சுதர்சனி | - | சிரேஸ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. எஸ் . கருணாகரன் | - | விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம் |

### எழுத்தாளர் குழு (வெளிவாரி)

| | | |
|---|---|---|
| சிரேஷ்ட பேராசிரியர் ஜயதேவ உயன்கொட | - | கொழும்புப் பல்கலைக்கழகம், கொழும்பு. |
| கலாநிதி. அத்துல விதானவசம் | - | சிரேஸ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை. |
| கலாநிதி. உபுல் அபேரத்ன | - | சிரேஸ்ட விரிவுரையாளர், றுகுணைப் பல்கலைக்கழகம், மாத்தறை. |
| திரு. டெரன்ஸ் புரசிங்க | - | சிரேஸ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், நுகேகொடை. |
| திரு. எம். ரஞ்சித் | - | சிரேஸ்ட விரிவுரையாளர், சபரகமுவப் பல்கலைக்கழகம், பெலிகுல்ஓயா. |
| கலாநிதி. எஸ். பாஸ்கரன் | - | சிரேஸ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை. |
| திருமதி. கே.சீ. த சில்வா | - | ஆசிரியர் சேவை, சுஜாதா பெண்கள் கல்லூரி, நுகேகொடை. |
| திருமதி. டபிள்யூ.கே.சீ. பிரியந்தி | - | ஆசிரியர் சேவை, விகாரமாதேவி பெண்கள் கல்லூரி, கிரிபத்கொடை. |
| திரு. எம். சௌந்தரராஜ் | - | ஆசிரியர் சேவை, ஹல்ஹதான் முஸ்லிம் வித்தியாலயம், பதுளை. |
| திரு. எஸ். மோகன் | - | ஆசிரியர் சேவை, ஹவுபே தமிழ் வித்தியாலயம், கஹவத்தை. |
| திரு. ஆர். சந்திரமோகன் | - | அபிவிருத்தி உத்தியோகத்தர், அம்பகமுவ பிரதேச செயலகம், கினிகத்தேனை |